# தமிழ் நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண். 100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை- 600 032.
தொலைபேசி : 044- 22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்,
சென்னை- 600 032.

முன்னிலை : முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப., (ஓ)

*******

முறையீட்டு மனு எண். 169/மா/2017

ஆணை எண். 25/2018

நாள் : 13/02/2018

திரு T. இராஜமாணிக்கம்,
திருநெல்வேலி.

– முறையீட்டு மனுதாரர்

மாநகராட்சி ஆணையர்,
திருநெல்வேலி.

– எதிர் மனுதாரர்

திருநெல்வேலி மாநகராட்சி, சுத்தமல்லி, பெரியார் நகர் 463. K.M. காம்ப்ளக்ஸ். முகவரியில் வசிக்கும் திரு T. இராஜமாணிக்கம் அவர்களின் 12.08.2017 நாளிட்ட முறையீட்டு மனு இம்முறைமன்ற நடுவத்தில் 16.08.2017 அன்று பெறப்பட்டு, 169/2017 எண்ணிட்ட முறையீட்டு மனுவாகப் பதிவு செய்யப்பட்டது. திருநெல்வேலி மாநகராட்சி ஆணையரின் அறிக்கை மற்றும் 07.02.2018 அன்று விசாரணையின்போது மனுதாரர் அளித்த வாக்குமூலம் பரிசீலிக்கப்பட்டு கீழ்காணும் ஆணை வெளியிடப்படுகிறது :-

## ஆணை

திருநெல்வேலி, சுத்தமல்லி, பெரியார் நகர் 463. K.M. காம்ப்ளக். முகவரியில் வசிக்கும் திரு T. இராஜமாணிக்கம் என்பவர், திருநெல்வேலி, பேட்டை, சிட்கோ தொழிற்பேட்டையில் திருமதி எஸ். தங்கம் என்பவரால் அனுமதியின்றி கட்டப்பட்ட தொழில் வளாகத்தை உரிய விதிகளின்படி நடவடிக்கை மேற்கொள்ள இம்முறைமன்ற நடுவம் ஆணையிட்டும், மாநகராட்சி ஆணையர் எந்தவித நடவடிக்கையும் மேற்கொள்ளாமல் நீதிமன்றத்தில் வழக்கு தொடர்வது தொடர்பாக நடவடிக்கையில் உள்ளது எனக் குறிப்பிட்டுள்ளார் எனத் தெரிவித்து உரிய நடவடிக்கை எடுக்கக்கோரி மீண்டும் இம்முறை மன்ற நடுவத்தில் முறையீடு செய்துள்ளார். முறையீட்டு மனுதாரரிடம் 07.02.2018 அன்று விசாரணை மேற்கொள்ளப்பட்டது. விசாணையின் போதும் இதனை உறுதி செய்து வாக்குமூலம் அளித்தார்.

2. இந்நேர்வின் முறையீட்ட மனுதாரர் திரு T. இராஜமாணிக்கம் என்பவரின் 14.09.2016 நாளிட்ட முறையீட்டு மனுவினைப் பரிசீலித்து, உரிய அனுமதியின்றி விரிவாக்கம் செய்யப்பட்ட தொழில் கூடம் சம்பந்தமாக உரிய விதிகளின்படி நடவடிக்கை மேற்கொள்ள 11.01.2017 நாளிட்ட இம்முறைமன்ற நடுவ ஆணை எண்.09/2017–இல் ஆணையிடப்பட்டுள்ளது. திருநெல்வேலி மாநகராட்சி ஆணையரும், தனது 31.07.2017 நாளிட்ட கடிதத்தில் வழக்கு தொடர்வதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது என முறையீட்டு மனுதாரருக்கு தெரிவித்துள்ளார்.

3. அனுமதியின்றி விரிவாக்கம் செய்யப்பட்ட இந்நேர்வு சம்பந்தப்பட்ட தொழிற்கூடக் கட்டடப் பணி 2016–ஆம் ஆண்டு மே திங்களில் தொடங்கப்பட்டு ஆகஸ்டு திங்களில் முடிக்கப்பட்டுள்ளது. அனுமதியின்றி கட்டப்பட்ட பகுதிகளை அப்புறப்படுத்த ஆணையிடக்கோரி 14.09.2016 நாளெண்ணிட்ட முறையீட்டு மனுவில் இம்முறைமன்ற நடுவத்திற்கு மனுதாரர் முறையீடு செய்கிறார். மேற்குறிப்பிட்ட முறையீட்டு மனுவும் அத்தொழிற்சாலையில் பணியாற்றிய திரு இ. அருள்முருகன் மற்றும் R. கிருஷ்ணன் ஆகியோர்களின் பெயர்களை சாட்சிகளாக் குறிப்பிட்டே இம்முறைமன்ற நடுவத்திற்கு முறையீடு செய்யப்பட்டுள்ளது. எனவே, மேற்குறிப்பிட்ட நபர்களுக்கு 2016–ஆம் ஆண்டு மே திங்களில் கட்டடம் கட்ட தொடங்கப்பட்டது தெரிந்திருந்தும், சமூக அக்கறையுடன் தொடக்கநிலையிலேயே உரிய அதிகாரிகளுக்கு தெரிவித்து கட்டடம் விரிவாக்கம் செய்வதை தடுக்க முயலாமல் பணி முடிவுற்ற பின்பே முறையீட்டு மனுதாரர் இம்முறைமன்ற நடுவத்தில் முறையீடு செய்துள்ளார். எனினும், மனுதாரரின் முறையீட்டு மனுவினை ஏற்று அனுமதியின்றி கட்டப்பட்ட கட்டடம் சம்பந்தமாக உரிய விதிகளின்படி நடவடிக்கை மேற்கொள்ள மாநகராட்சி ஆணையருக்கு ஆணையிடப்பட்டுள்ளது. மாநகராட்சி ஆணையரும் வழக்கு தொடர்வதற்கான உரிய நடவடிக்கையினை மேற்கொண்டுள்ளதாக முறையீட்டு மனுதாரருக்கு தெரிவித்துள்ளார். எனவே, தொடர் நடவடிக்கை தொடர்பாக சம்பந்தப்பட்ட ஆணையாளரை மனுதாரர் தொடர்பு கொள்ள அறிவுறுத்தலாம் என முடிவு செய்து அவ்வாறே ஆணையிடப்படுகிறது.

2018– ஆம் ஆண்டு, பிப்ரவரி திங்கள், 13–ஆம் நாளன்று, என்னால் கையொப்பமிடப்பட்டு, அலுவலக முத்திரையுடன் ஆணையிடப்படுகிறது.

//ஒப்பம்//--
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

செயலாளர்.

பெறுநர்

1. மாநகராட்சி ஆணையாளர்,
திருநெல்வேலி மாநகராட்சி,
திருநெல்வேலி.

2. திரு. T. இராஜமாணிக்கம்,
463, K.M. Complex,
பெரியார் நகர்,
சுத்தமல்லி போஸ்ட்,
திருநெல்வேலி – 627 603.

நகல் : முறைமன்ற நடுவரின் நேர்முக எழுத்தர்
பிரிவு அலுவலர் (நிர்வாகம்)
பேரூராட்சி பிரிவு – 3
இ.கோ. / உதிரி